பத்திரிக்கை செய்தி

தனிப்பட்டா மாறுதல் செய்து தர ரூ.10,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய சர்வேயர் கைது

புகார்தாரர் திரு.இளையராஜா, ஆலமரத்துப்பட்டி கிராமம், முணியம்பாடி அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய தந்தையின் பெயரில் உள்ள நிலத்தில் பாகப்பிரிவினை பெற்று தன்னுடைய பெயர் மற்றும் தன்னுடைய அக்கா பெயரில் பத்திரப்பதிவு செய்துள்ளார். இந்த இடங்களுக்கு தனிப்பட்டா பெயர் மாறுதல் செய்ய இணையதளம் மூலமாக விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.விஜயகுமார், சர்வேயர், மணியம்பாடி கிராமம், தருமபுரி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தருமபுரி மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 11.07.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.விஜயகுமார், சர்வேயர், லஞ்ச பணம் ரூ.10,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.